ந.க.எண். 14956/2006/ஈ 5

பேரூராட்சிகள் ஆணையரகம்
சென்னை
நாள். 4.08.2008

**சுற்றறிக்கை**

பொருள்— நிர்வாகம் பேரூராட்சிகளில் பேணப்பட்டுவரும் காசோலை புத்தகம் மற்றும் தெருவிளக்குகள் கொள்முதல் குறித்து அறிவுரை வழங்கப்படுகிறது.

பேரூராட்சிகளில் தற்போது பேணப்பட்டு வரும் வங்கி கணக்குகள், காசோலை புத்தகம் மற்றும் பொது சுகாதாரப் பொருட்கள்/ தெருவிளக்குகள் கொள்முதல் குறித்த உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் இயக்குநரால் நேரில் விவரித்தவாறு, பேரூராட்சிகளில் நடைபெற்றுவரும் தவறுகளை/ முறைகேடுகளை தவிர்ப்பதற்காக பின்வரும் வழிமுறைகளை தவறாது கடைபிடிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

i வங்கி கணக்குகள் அனைத்தும் சேமிப்புக் கணக்காகத்தான் (Savings BanK Account) பேணப்பட வேண்டும். எங்கெங்கு நடப்பு கணக்கு முறை (Current Account) உள்ளதோ அவைகளனைத்தும் சேமிப்பு கணக்காக (Savings Bank Account) உடன் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

ii வணிக வங்கி/மத்திய கூட்டுறவு வங்கி / கருவூலம் / அஞ்சலகம் ஆகிய அனைத்து வித வங்கிகளின் காசோலைப்புத்தகத்தில், ஒவ்வொரு இதழ் (in every cheque leaf) களுக்கு அடுத்து காசோலை அளவில் வெள்ளைத்தாள் இணைத்து தைத்த பின்னர் , காசோலை பயன்படுத்தும் போது காசோலைக்கும் வெள்ளைத்தாளுக்கும் இடையில் கார்பன் பேப்பர் வைத்து பயன்படுத்த வேண்டும்.

iii மூன்றாம் நபர் காசோலைகள் ரூ. 500/ க்கு மேல் கண்டிப்பாக குறுக்கு கோடிட்டுதான் வழங்கப்பட வேண்டும் திறந்த காசோலையாக (open cheque) வழங்கக்கூடாது.

iv பேரூராட்சிகளுக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிகள் மற்றும் பொது சுகாதார பொருட்கள் தவறாமல் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் (Authorised Dealers) மூலம் இந்திய தரச்சான்றளிக்கப்பட்ட (BIS) பொருட்களை மட்டுமே உரிய முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

v குறிப்பாக தெருவிளக்குகள்/லார்விசைடு (Larvicides) அரசால் நிர்ணயித்த அளவீட்டின்படி உபயோகப்படுத்த வேண்டும்.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளிக்க வேண்டும். மேலும், மண்டல உதவி இயக்குநர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலிருந்தும் பேரூராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா ? என்பதை அறிந்து இயக்ககத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

**ஒம்/— கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   அனைத்து மண்டலம்

2. இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை,
   குறளகம், சென்னை — 108. (தகவலுக்கு)